**அக்டோபர் - 23**

**"உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்."   - மத் 20 : 27.**

புறஜாதிக்குள்ளே ஆட்சி செய்கிறவர்கள் எஜமான்களாய் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு ஊழியமும் செய்கிறதில்லை. ஆனால் ஊழியம் கொள்கிறார்கள். ஆனால் யேசுவை பின்பற்றுகிறவர்களிடத்தில் இந்தச் சட்டம் எதிரிடையாக மாற்றப்படுகிறது. யார் மிகவும் அதிகமாக ஊழியம் செய்கிறானோ அவனே மிகவும் உயர்வாக மதிக்கப்பட வேண்டும். காரியங்களின் தெய்வீக ஒழுங்கில் எவ்வளவு அழகு இருக்கிறது.! சரியான மனதையுடைய எல்லோரும் இங்கே நிர்ணயிக்கப்பட்டிருக்கிற தத்துவங்களோடு பூர்ணமாக ஒத்த உணர்வு கொள்ளக் கூடியவர்களாய் இருக்கிறார்கள். அவைகள் எவ்வளவு நியாயமானவைகளாகவும், உலகத்தின் ஆவிக்கு மாறானவைகளாகவும் இருக்கின்றன.! உண்மையாகவே வார்த்தையின் இந்த அர்த்தத்தின்படி, கர்த்தரைப் பின்பற்றுகிறவர்கள் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்தல், சந்தர்ப்பம் கிடைக்கும்போது எல்லா மனிதருக்கும் நன்மை செய்தல், ஆகிய நற்கிரியைகளுக்காகவுள்ள தங்களுடைய ஆர்வத்தில் ஒரு விசேஷமான ஜனங்களாயிருக்கிறார்கள். **- Z ’04, 140 (R 3362)**

உலகத்தாருடைய மகத்துவத்தின் லட்சியம், அசாதாரணத் திறமை, செல்வம், வல்லமை, அதிகாரம், அறிவு, புகழ் அல்லது ஒரு அரிய சாதனை ஆகிய இவைகளைக் கொண்டதாயிருக்கிறது. கர்த்தருடைய மகத்துவத்தின் லட்சியம் தன்னலமற்ற அன்பின் ஊழியமாயிருக்கிறது. ஆகையால், தன்னலமற்ற அன்பினால் ஏவப்பட்டு, ஞானம், வல்லமை, நீதி இவைகளுக்கு இணக்கமாக அவருடைய ஏற்பாட்டின் பாகமாக விஷேசமாகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைச் சேர்ப்பதிலும்,அவர்களுக்கு பக்திவிருத்தி உண்டாக்குவதிலும், நம்முடைய ஜீவனைக் கொடுத்து ஊழியம் செய்யும் பொழுது, அதற்கு சமமாக அவருடைய பார்வையில் நாம் பெரியவர்களாயிருக்கிறோம். இதைப்போலொத்த ஒரு மகத்துவத்தை நாம் நாடலாம். அகிலும் கனத்திலும் மேம்பட்டவர்களென்று தெரிந்திருக்கிற மற்றவர்களை நாம் மிஞ்ச வேண்டும் என்கிற எண்ணத்தோடு அல்ல. நம்முடைய சக்தியில் எல்லா நல்வழியிலும் மற்றவர்களுக்கு நாம் பிரயோஜனமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். யேசு அவ்விதமாக இருந்ததின் காரணமாகவே எல்லோரையும் விட அவர் மிகப்பெரியவராயிருக்கிறார். **- P ’30, 166.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**நீதி 15:33; மத் 18:1-6; 20:20-26,28; மாற் 10:42-45; மத் 23:11; அப் 20:35; ரோம 12:10,16; 15:1-3; 1பேது 5:3,5; ஏசா 14:12-15; கலா 6:2,10; பிலி 2:5-9; லூக் 22:27; யோவா 13:14.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 312 (R 5785).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் ஊழியம் செய்யத் தேடினேனா? வெளித்தோற்றத்துக்கா அல்லது பயன்படத்தக்கதாக சில காரியங்களை செய்யத் தேடினேனா? அதில் உதவியாக அல்லது இடையூறாக இருந்தது எது? இதுவரை அதன் பலன் என்ன?**